இரிச்மண்டு தமிழ்ச் சங்கம்
வழங்கும்

# கதம்பம்


மே 2022



# இந்த இதழில்...


- அறிவிப்பு மடல்
- குறளும் பொருளும்
- திரையும் இசையும் (ராகம்: பந்துவராளி)
- கடிலக்கரையினிலே - பண்ருட்டி பலாச்சுளைகள் 2
- ஒரு பிரஜையின் பிரயாணம் (மீனாவுடன் மிக்சர்)
- திரைப்பட விமர்சனம் (சாணிக் காயிதம்)
- தமிழ்ப்பள்ளி மாணவர்கள்
- உடல்நலக் குறிப்பு
- வாசகர் கருத்து படிவம்

# அறிவிப்பு மடல்



**கோடைகால முகாம்**:  நமது உலகமும் நடைமுறைகளும் இயல்பு நிலைக்குத் திரும்பி வருகின்றன. கோடை காலம் ஏற்கனவே தொடங்கி விட்டது. பள்ளிகள் மூடும் தருவாயில் உள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் இரிச்மண்டு தமிழ்ச் சங்கத்தின் 8வது கோடைக்கால முகாமை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். உங்கள் கூடாரங்களையும் முகாம் கருவிகளையும் தயார் செய்யுங்கள்.

**இடம்: டுவின் லேக் ச்டேட் பார்க்**
**தேதி: ஆகஸ்டு 19 முதல் 21**

மேலும் விவரங்களுக்கு வரவிருக்கும் மின்னஞ்சல்களைப் பார்க்கவும்.





All submissions for **Kadambam/கதம்பம்** should be emailed to newsletter.rts@richmondtamilsangam.org by the 15th of each month.

# குறளும் பொருளும்!

உலகத்துல கார் வாங்க வள்ளுவர்ட்ட யோசனை கேட்கும் ஆளு நீதான்டா. அதும், நான் கார் வாங்குகிறேன், நீ குறளை வைத்து விளையாடுற, நடத்து.

அட சும்மா விளையாட்டுக்கு ஒரு புகழ்பெற்ற குறளை கார் வாங்கும் முடிவில் பொருத்திப் பார்த்தேன் என்றான் செல்வம்.

சரி, ஆரம்பிச்சுட்ட, சொல்லு கேட்போம்.

அந்த ஒரு குறளை மட்டும் விளக்கவா இல்லை "பல குறள் மன்னன்" என சில குறள் விளக்கங்களை இணைத்துச் சொல்லவா?

யப்பா, என் மூளை ஒரு நேரத்தில் ஒன்று என்றே புரிந்துகொள்ளும், நீ ஒரு குறள் மட்டும் சொல்லு இப்போதைக்கு.

"அப்படியே ஆகட்டும்" என்று ரொம்பவே விளையாட்டு மனநிலையில் இருந்தான் செல்வம்.

கார் வாங்க எவ்ளோ காசு வெச்சிருக்க?

ஏற்கனவே கொஞ்சம் சேர்த்து வைத்திருந்தேன், இப்போ அலுவலகத்தில் ஊக்கத் தொகை கொஞ்சம் கொடுத்தாங்க; எல்லாமா சேர்த்து கார் வாங்க ரெடி.

கேட்ட கேள்விக்கு முழுசான பதிலைக் காணோம். இருக்கட்டும்.

அடுத்த கேள்வி. என்ன கார் வாங்க யோசிச்சு வெச்சிருக்க?

அங்கதான் கொஞ்சம் இடிக்குது. Tesla வின் புது மாடல் மேல ஒரு கண்ணு. தெரிஞ்சவங்க சிலர் வாங்கிட்டு ஒரே அலப்பறை. எனக்கும் ஆசையா இருக்கு. ஆனா காசு கொஞ்சம் பத்தாது. அங்கே இங்கே புரட்டி சமாளிச்சுடலாம்னு நினைக்கிறேன். Tesla வின் புது மாடல்ல base version க்கு போதுமான அளவு தேத்திடுவேன். ஆசை நிறைவேறிடும். என்ன சொல்ற?

நான் என்ன சொல்றது, வள்ளுவர் சொல்கிறார் கேள்.

அதுக்கும் முன் இன்னொரு கேள்வி. ஒரு Fully loaded, 3 ஆண்டு பழைய வண்டி வாங்க உன் சேமிப்பு போதுமா?

தாராளமா போதும். மிச்சம் கூட இருக்கும். ஆனா புதுசு புதுசுதான்டா.

இல்லைங்கலை. இப்போ, வேற ஒரு சூழலுக்கு வள்ளுவர் எழுதிய குறளை இங்கே சொல்றேன், பொருத்திப் பார்த்துக்கோ.

## குறளும் பொருளும்!

காட்டில் மறைந்திருக்கும் முயலை வெற்றிகரமாக அம்பு எய்து வேட்டையாடுபவனாக இருப்பதைவிட, போர் யானையைக் கொல்ல வேல் வீசும் வீரனாக இருப்பது இனிது என்கிறார். யானை பிழைச்சுட்டா/தப்பிச்சுட்டா கூட பரவாயில்லை முயல் வேட்டைக்காரனாக இருப்பதைக் காட்டிலும் இதுவே இனிது என்கிறார்.

அதாவது, இருக்கிற காசில் புது மாடல் base version காருக்குச் சொந்தக்காரனாய் இருப்பதைவிட, எல்லா வசதிகளும் கொண்டிருக்கும் Fully loaded, 3 ஆண்டு வண்டியை வாங்குவது இனிது என்கிறேன் நான்.

யப்பா டேய்..

உன் விளக்கத்தை வள்ளுவர் கேட்டார்னா குபீர்ன்னு அதிர்ச்சி ஆகிடுவார்டா.

ஒன்னு சொல்றேன் கேளு. என் தமிழாசிரியர் சொல்லிக் கொடுத்த trick.

பொதுவாக மாணவர்கள் தவிர்க்கும் இலக்கண, இலக்கிய வகுப்புகளை எப்படிக் கையாள்வது என்று சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

ஏதாவது ஒரு ஆர்வம் மிக்க, தொடர்பற்ற தலைப்பில் பேசத் துவங்க வேண்டும். மாணவர்களின் கவனத்தை முழுசாகப் பெறும் போது, சொல்ல வந்த பாடத்தையும் உள்நுழைத்து பேசிட வேண்டும். தேனில் மருந்தைக் குழைத்து பிள்ளைகளுக்குக் கொடுப்பதைப் போல.

தேன்+மருந்து கலவையை உன் வாயில் போட்டுட்டேன். இனி, காரும் வரும் குறளும் மறக்காது. என்சாய் மாடி, அடுத்த வாரம் வர்றேன் நேரமாச்சு என்றபடியே கிளம்பினான்.

### கான முயல்எய்த அம்பினில் யானை

பிழைத்தவேல் ஏந்தல் இனிது

கான = கானகம் = காடு

வேறு எந்தச் சொல்லுக்கும் விளக்கம் தேவைப்படாத குறள்.

கானமுயல் = காட்டுமுயல் என்று சொல்லிவிட்டு, யானைக்கு எதும் சொல்லாமல் விடுகிறார். காட்டுயானை அல்ல, போர்க்களத்தில் உள்ள யானை என்று நம்மையே புரிந்து கொள்ள வைக்கிறார். குறள் இருக்கும் அதிகாரம் படைச்செருக்கு. அதனால் போர்க்களம், போர்யானை என்பன இயல்பான சிந்தனை.

எய்த அம்பு = முயலை நோக்கி எய்த அம்பு.

# குறளும் பொருளும்!

யானை பிழைத்த வேல் = யானையை நோக்கி எறிந்த வேல், ஆனால் யானை பிழைத்துவிட்டது. அப்படியெனில் முயல் பிழைக்கவில்லை என்ற செய்தியும் உள் அடக்கியிருக்கிறார்.


பெரிய முயற்சிகள் செய்பவராக இருப்பது பெருமை, சிறப்பு என்றுகூட சொல்லவில்லை. முழுமையாக வெற்றி கிட்டாவிட்டாலும், அப்படி இருப்பதே "இனிது" என்கிறார். இன்றைய பேச்சு வழக்கில், "அதான் பரவாயில்லை" என்பது போல.

ஐயனே, குறளை நவில் தோறும் வியந்து போகிறோம். வாழிய நின் புகழ்.

**எழுதியவர்: உள்ளூர்க்காரன்**

# திரையும் இசையும் - பந்துவராளி

இது **51** ஆம் மேளகர்த்தா ராகம். இந்த ராகத்திற்கு காமவர்தினி என்று மற்றுமொரு பேர் உண்டு.




கர்நாடக சங்கீதத்தில், ஸ்வாதி திருநாள் அவர்களின் **சாரஸாக்ஷ பரிபாலய,** மைசூர் வாசுதேவாச்சார் அவர்களின் **சங்கரி நின்னே,** முத்துஸ்வாமி தீக்ஷிதரின் **ராமநாதம் பஜேஹம், விஷாலாக்ஷீம்** , தியாகராஜரின **சம்போ மஹாதேவ, ரகுவரா நன்னு , அபராமபக்தி, நின்னே நெரநம்மி, சிவ சிவ என ராதா** போன்ற கீர்த்தனைகள் பிரபலமானவை.

திரைப்படங்களில், இந்த ராகத்தில் அமைந்த பாடல்களில் சில:

| திரைப்படம் | பாடல் | இசையமைப்பாளர் |
|---|---|---|
| சிவகவி | அம்பா மனம் கனிந்து | பாபநாசம் சிவன் |
| அபூர்வ ராகங்கள் | ஏழு ஸ்வரங்களுக்குள் | எம், எஸ், விஸ்வநாதன் |
| நினைவெல்லாம் நித்யா | ரோஜாவை தாலாட்டும் தென்றல் | இளையராஜா |
| நான் கடவுள் | ஓம் சிவோஹம் | இளையராஜா |
| பாரதி | நின்னை சரணடைந்தேன் | இளையராஜா |
| நந்தா | ஓர் ஆயிரம் யானை | யுவன் ஷங்கர் ராஜா |
| ரங்கீலா | ஹை ராமா | ஏ . ஆர். ரஹ்மான் |
| தெனாலி | அத்தினி சித்தினி | ஏ . ஆர். ரஹ்மான் |
| இதய நாயகன் | அற்புத கலைதான் | தேவா |

**தொகுப்பு : நாராயணன் சுப்ரமணியன்**

# கடிலக்கரையினிலே - பண்ருட்டி பலாச்சுளைகள் 2

பண்ருட்டியில் எங்கள் வீட்டில் எப்போதும் நண்பர்கள் நடமாட்டம் இருந்து கொண்டே இருக்கும். பக்கத்து ஊர்களான கடலூர், விழுப்புரத்தில் கலைக்கல்லூரிகள் இருந்தன. தினமும் மாணவர்கள் ரயிலில் போவார்கள். விழுப்புரத்திலாவது கல்லூரி ரயில்நிலையத்துக்கு அருகில் இருந்தது. கடலூரில் ரயில் நிலையத்தில் இருந்து கல்லூரிக்கு பேருந்தில் வேறு போகவேண்டும். இருந்தாலும் மாணவர்களுக்கு ரயில் சீசன் பாஸ் சலுகையில் கிடைப்பதால் அனைவரும் ரயிலில்தான் போவார்கள். பண்ருட்டியில் இருந்து தினமும் சிதம்பரத்தில் இருக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கு போன மாணவர்களும் உண்டு.

அண்ணன்கள் வீட்டில் இருக்கும்போது கடலூர் மாணவர்கள் காலையில் வீட்டுக்கு வந்துவிட்டு ரயிலடிக்குப் போவார்கள். அதில் ஒருவர்தான்...

ராஜா!

ராஜா என்கிற முருகன். வீட்டிற்கு ஒரே பிள்ளை. அம்மா செல்லம் என்று நினைவு. என்னுடைய நினைவுகளில் தங்கியது இவரின் ஒரு வினோத பழக்கம். நடந்து வரும்போதும், உட்கார்ந்திருக்கும்போதும் கைவிரல்களை நீட்டி மடக்கிக் கொண்டே இருப்பார். நான் சிலநாள் பார்த்துக் கொண்டே இருந்தேன். ஏன் அப்படி செய்கிறார் என்று மண்டையை உடைத்துக் கொண்டேன். ஒரு நாள் அவரிடமே கேட்டு விட்டேன். என்ன செய்கிறீர்கள் விரல்களை?

டைப் அடிக்கறேண்டா!

டைப்பா!!!???

ஆமாம்! அப்போதுதான் டைப்ரைட்டிங் வகுப்பில் சேர்ந்திருந்தார். எழுத்துக்கள் இடம் பழகும்வரை மனசுக்குள்ளே ஏதாவது வார்த்தை சொல்லி அதை எப்படி டைப் செய்வது என்று பழகிக் கொள் என்று டைப்பிங் வாத்தியார் உபதேசம் செய்தாராம். இவர் அதற்கு ஒரு படி மேலே போய், நாமெல்லாம் சிறுவயதில் காற்றில் கிடார் வாசிப்போமே, அது மாதிரி காற்றில் டைப் அடித்துக் கொண்டிருந்தார். நடக்கும்போது, உட்கார்ந்திருக்கும்போது காதிலோ கண்ணிலோ விழும் சொற்களை காற்றில் டைப் அடித்துக் கொண்டே இருப்பார்.

ராஜா என்றதும் அடுத்து நினைவுக்கு வருவது சங்கராபரணம். அதில் ஆண்டாளு என்ற சிறுமி திண்ணையில் ஒரு பாட்டு வாத்தியாரிடம் பாட்டு கற்றுக் கொள்ளும் காட்சி வரும்

# கடிலக்கரையினிலே - பண்ருட்டி பலாச்சுளைகள் 2

அந்த வாத்தியார் கர்நாடகமாக இன்னும் பாடிக் கொண்டிராமல் நவீனமாக பாடவேண்டும் என்று சொல்லிக் கொடுப்பார். அப்போது வீதியில் வரும் சங்கர சாஸ்திரி வாத்தியாரை திட்டிவிட்டுப் போவார். அந்த காட்சி ராஜாவுக்கு ரொம்பவும் பிடித்துப் போனது. எப்போது வந்தாலும் சங்கராபரணம் கேஸட்டில் அந்த இடத்திற்கு தள்ளி கேட்போம். அதை கேட்பதைவிட அந்தக் காட்சியை ராஜா ரசிப்பதைக் காண கண் கோடி வேண்டும். ஒவ்வொரு முறை கேட்கும்போதும் முதல் முறை கேட்பது போல் ஒரு பரவசத்தில் இருப்பார். சிரிப்பை அடக்க முயல்வார். அதுவும் அந்த "ராக்கெட்லு ஜாக்கெட்லு ஜெட்லு" வரும்போது அடக்கவே முடியாது. அப்படி சிரிப்பார். பிறகு வாத்தியார் "புரோச்சேவா ரெவருரா"வை பிரித்து மேயும்போதும் தாங்க முடியாமல் சிரிப்பார். அந்த காட்சி முடிந்தவுடன் கேஸட்டை நிறுத்தி விடுவோம். அடுத்த சில நிமிஷங்கள் ராஜா தெரிந்தவரை அந்த டயலாக் எல்லாம் சொல்லிச் சொல்லி சிரிப்பார். தவறாமல் "ராக்கெட்லு ஜாக்கெட்லு" உண்டு. வீடே அதிரும்.

ராஜா சில தெலுங்கு ஜோக்குகள் சொல்வார். ஒரு தமிழன் ஆந்திராவில் ரயிலில் போய்க் கொண்டிருந்தானாம். ஒரு இடத்தில் ரயில் நின்றவுடன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவனிடம் தமிழில் "இது என்ன ஊர்" என்று கேட்டானாம். அவன் கேட்டது புரியாமல் "ஏமண்டி" என்றானாம். ஓஹோ அப்படியா, நன்றி! அடுத்த ஊர் வந்தவுடன், அதே கேள்வி. அவனும் "ஏமண்டி" என்று பதில். சரி அது மேல் ஏமண்டி, இது கீழ் ஏமண்டி போல

இருக்கும் என்று அமைதியாகி விட்டான். அடுத்த ஊரில் அதே நடந்தது. தமிழனுக்கு வந்ததே கொலைவெறி. என்னடா நானும் பாக்கறேன், ஒவ்வொரு ஊரிலும் ஒரே பெயரை சொல்லி ஏமாத்தற, என்ன பாத்தா நக்கலா தெரியுதான்னு அடிக்கப் போனானாம். பதறிப் போன தெலுங்கன் கொட்டகா, கொட்டகா என்றானாம். ஓ - இந்த ஊர் கொட்டகாவா - ஒழுங்கா சொல்ல வேண்டியதுதானே என்று அமைதியானானாம்.

ராஜாவின் வீட்டருகில் ஒரு இளம் தம்பதி குடியிருந்தார்கள். அந்த தம்பதிகளின் சண்டை தெருவில் பிரசித்தம். ஒவ்வொரு முறை வரும்போதும் அன்றைய சண்டை குறித்து ராஜா கதை சொல்வார். அதில் ஒரு நாள் நினைவில் நிற்கிறது. அன்று சண்டை அதிகமாகி ஒரே களபரம். சாமான்கள் எல்லாம் உருண்டது. திடீரென கதவைத் திறந்து கணவன் எடுத்தார் ஓட்டம். யாரோ எதோ காரணம் சொல்லி உள்ளே போய் பார்த்தால். நிறைய தட்டு பாத்திரம் எல்லாம் இரைந்து கிடந்தன. அனைத்துக்கும் மேலே - சுவற்றில் டால்டாவோடு ஒட்டிக் கொண்டிருந்த கரண்டி!

இப்போது பண்ருட்டி வாட்சப் குழுவிலும் ராஜா கலக்கிக் கொண்டிருக்கிறார்.

**எழுதியவர்: நாகு பரசு**

# ஒரு பிரஜையின் பிரயாணம்
# (மீனாவுடன் மிக்சர்)

அமெரிக்காவில் சேர்ந்தா மாதிரி நாலு தடவை உங்களை ஒரு சக இந்தியர் கடைத்தெருவில் பார்த்தார்னா அடுத்த முறை பல நாள் பழகின உணர்வோடு கிட்ட வந்து கை குலுக்கி “ஹலோ, எப்படி இருக்கீங்க? கல்யாணம் ஆகி குழந்தைங்க இருக்கா? நீங்க அமெரிக்க பிரஜையாகிட்டீங்களா?” ன்னு சர்வ நிச்சயமா கேட்பார். இந்த கேள்விக்கான உங்களோட பதில் அவரோட வாழ்க்கையில் எந்த ஒரு வளமும் கொடுக்காதுன்னு தெரிஞ்சாலும் நிச்சயம் கேட்பார்.

இந்த கேள்விக்கு கடந்த சில வருஷங்களா பல முறை 'இல்லை'ன்னு பதில் சொல்லி, சொல்லி ஏதோ பரீட்சையில் பெயிலான உணர்வு எனக்கு. இனியொரு முறை இந்த அவமானம் பட என்னால முடியாதுன்னு என் கணவர்கிட்ட சில மாதங்களுக்கு முன்னால கண்டிப்பா சொல்லிட்டேன். முதலில் அவ்வளவா கண்டுக்காத அவர் நான் சவுதி ராணி மாதிரி நீள கருப்பு அங்கியும், முகத்திரையும் போட்டுட்டு தான் இனி காய்கறி வாங்கவே வெளியே போவேன்னு அடம் பிடிக்க ஆரம்பிச்சதும் தான் பிரச்சனையோட தீவிரத்தை புரிந்து கொண்டு காரியத்தில் இறங்கினார்.

இமிக்ரேஷன் ஆபீசில் இருந்து முதல் கடிதம் ஒரு வழியா வந்து சேர்ந்தது. ஆனா என்ன ஒரு அக்கிரமம்? எங்க ரெண்டு பேரையும் உடனடியாக வந்து கைநாட்டு (fingerprinting) போட்டு விட்டு போகும் படி அந்த கடிதம் ஆணையிட்டிருந்தது. வந்ததே கோபம் எனக்கு! "என்னை பார்த்தா கைநாட்டு கேஸ் மாதிரியா இருக்கு இவங்களுக்கு? எவ்வளவு கஷ்டப்பட்டு, திண்டாடி, தெருப்பொறுக்கி பட்டம் வாங்கியிருப்பேன்? கை நாட்டு போடவா கூப்பிடறாங்க? என்னை யாருன்னு நினைச்சாங்க இவங்க?" தீபாவளி சரவெடி பார்த்திருக்கீங்களா? அதே மாதிரி தான் என் கணவர்கிட்ட அன்னிக்கு நான் பொரிஞ்சு தள்ளினேன். 'டாய்....எவன்டா
அவன்' ன்னு சத்யராஜ் பாணியில லுங்கியை தூக்கி சொருகாத குறை மட்டும் தான்.

சரியான சமயத்தில் என் கணவர் மட்டும் சமயோஜிதமா என் கிட்ட 'அளவுக்கு அதிகமா ஆசைப்படற ஆம்பளையும், அளவுக்கு அதிகமா கோபப்படற பொம்பளையும் நல்லா வாழ்ந்ததா சரித்திரமே இல்லைன்னு நம்ம ரஜினி சொன்னதை மறந்துடாதே மீனா' ன்னு சொல்லி என் கோபத்தை கட்டுப்படுத்தலைன்னா என்ன ஆயிருக்குமோ சொல்லவே முடியாது. படையப்பா திரைப்படம் என் வாழ்க்கையில இப்படி ஒரு திருப்புமுனையா அமையும்னு நான் எதிர்ப்பார்க்கவே இல்லை.

# ஒரு பிரஜையின் பிரயாணம்
# (மீனாவுடன் மிக்சர்)

ஒரு வழியா கிளம்பி இமிக்ரேஷன் ஆபீசுக்குள் நுழைந்தா என்ன ஒரு ஆச்சர்யம்? அப்படியே நம்ம தமிழ்நாடு கவர்மென்ட் ஆபீஸ் ஒண்ணுக்குள்ள நுழையறா மாதிரியே இருந்தது.

இதை எங்கேயோ நிச்சயம் பார்த்திருக்கோமேன்னு நினைக்க வைக்க கூடிய அதே அழுக்கு நாற்காலி. அதே அழுது வடியற சுவர். Terminator படத்து வில்லன் மாதிரி அதே உணர்ச்சியை காட்டாத முகங்கள். ரொம்ப சந்தோஷமா இருந்தது எனக்கு. இருக்காதா பின்ன? ரொம்ப நாட்களுக்கு அப்புறம் இந்திய மண்ணை தொட்ட உணர்வாச்சே! ஒரு வழியா என் டோக்கன் எண்ணை (ஆமாம், இங்கயும் அதே டோக்கன் தான்) கூப்பிட்டதும் என் கணவருக்கு பிரியா விடை கொடுத்துட்டு ஒரு அழுக்கு ரூமிலேர்ந்து இன்னொரு அழுக்கு ரூமுக்கு ஒரு அம்மணி பின்னாலேயே போனேன்.

என் கையை தூக்கி பார்த்த அந்த அம்மணி ஏமாற்றத்தில் சோர்ந்து போய் நின்னது சில நொடிகள் தான். உடனே சமாளிச்சிண்டு பிளாஸ்டிக் டப்பியில இருந்த ஒரு துர்நாற்ற தீர்த்தத்தை சர் சர்ன்னு என் கைல அடிச்சு ஒரு துணியினால என் விரல்களை ஆவேசமா தேய்க்க ஆரம்பிச்சாங்க. இனி தேச்சா எலும்பு தான்னு உறுதியானதும் தேய்ப்பதை நிறுத்திட்டு என் விரல்களை கையில் தூக்கி பிடிச்சு அவங்க அவ்வளவு உன்னிப்பா ஆராயறதை பார்த்து எனக்கு கொஞ்சம் உதறல். என்ன பிரச்சனை? இப்போ தான் ரின் சோப்பு போட்டு தோச்ச வெள்ளை வேட்டி மாதிரி பளபளன்னு தானே இருக்கு நம்ம விரல்? ஒருவழியா என் விரல்களோட அழகில் திருப்தியான அந்த அம்மா ஒவ்வொரு விரலா எடுத்து ஒரு கண்ணாடி scanner மேல வச்சு இப்படியும் அப்படியும் திருப்பி திருப்பி விளையாட ஆரம்பிச்சாங்க.

பூமா தேவி மாதிரி இல்லைன்னாலும் நான் பொறுமைசாலி தான். ஆனா எத்தனை நேரம் தான் கையை இன்னொருவர் கிட்ட கொடுத்துட்டு பேக்கு மாதிரி நிக்கறது? நான் மட்டும் Barbie பொம்மை மாதிரி இருந்திருந்தேன்னா என் விரல்களை கழட்டி அவங்க கைல கொடுத்து 'ஆசை தீர விளையாடிட்டு திரும்பி கொடும்மா ராசாத்தி'ன்னு சொல்லிட்டு நிம்மதியா ஒரு ஓரமா உக்காந்திருப்பேன்.

ஒரு வழியா பல கோணங்களில் என் விரல்களை படம் பிடிச்சுட்டு கொசுறுக்கு என் முகத்தையும் சின்னதா படம் பிடிச்சுட்டு அவங்க வேலையை முடிச்சாங்க அந்த அம்மா.

# ஒரு பிரஜையின் பிரயாணம்
# (மீனாவுடன் மிக்சர்)

'கிளம்பட்டா தாயீ' ன்னு பையை தூக்கிண்டு வெளியே போக நான் திரும்பினா என் கைல ஒரு பேப்பரும் பேனாவும் கொடுத்து மறுபடி உக்கார வச்சிட்டாங்க. என்ன விஷயம்னு பார்த்தா அந்தம்மா இன்முகமா என்னை வரவேற்று எனக்கு இனிமையான அனுபவம் ஒண்ணை கொடுத்தாங்களான்னு கேள்வி கேட்டிருந்தாங்க. நான் எழுதறதை எழுதி அந்தம்மா கைலயே வேற அதையும் கொடுக்கணுமாம். இதென்ன வம்பு! நான் பாட்டுக்கு எசகுபிசகா ஏதாவது எழுதி அவங்க கைல கொடுத்தா அவங்க கோச்சுகிட்டு என்னை வீட்டுக்கு அனுப்பாம உக்கார வச்சு என் விரலை எடுத்து இன்னும் நாலு மணி நேரம் திருகினா என்ன ஆறது?

சரி, இப்ப என்ன? சத்தியமா பண்ண சொல்லறாங்க? அவங்க மனம் குளிர நாலு வார்த்தை சொன்னா போகப்போறது என் காசா பணமா? இப்படி தீர்மானம் பண்ணி அவசரமா பேனாவை எடுத்தேன். உன்னைப் போல உண்டாம்மா ராசாத்தி, என் ஓட்டு நிச்சயம் உனக்கு தான்னு அடிச்சு தள்ளி எழுதி குடுத்துட்டு என் விரல்களை பேன்ட் பாக்கெட்குள்ள ஜாக்கிரதையா மறைச்சு வச்சு வெளிய கொண்டு வந்து சேர்த்தேன்.

**எழுதியவர்: மீனா சங்கரன்**

# சாணிக் காயிதம்

பத்து வருடங்களுக்கு முன் வந்த I Spit On Your Grave ஆங்கிலப் படத்தைப் பட்டி, டிங்கரிங் பார்த்து, தியேட்டர் ரிலீஸுக்குப் போகாமல் நேரடியாக ஓடிடியில் வெளியிட்டிருக்கிறார்கள் (Prime).

சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிட்ட கொலைகாரர்களை, பாதிக்கப்பட்ட இருவர் (ஒன்று விட்ட அண்ணன்-தங்கை) சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துப் பழி வாங்குவதுதான் கதை. அதை அபாரமான ஒளிப்பதிவு, மாறுபட்ட காட்சி மொழி, அதீத வன்முறைக் காட்சிகளின் மூலமாகச் சொல்லியிருக்கிறார்கள்.




பாடல்கள், நகைச்சுவைக் காட்சிகள் மற்றும் அநாவசிய சென்டிமென்ட் காட்சிகள் என்று கதையின் ஓட்டத்திற்கு தேவையில்லாத அம்சங்கள் இன்றிப் படம் எடுத்த இயக்குநர் அருண் மாதேஸ்வரனுக்குப் பாராட்டுக்கள். பிளாஷ்பேக்கையும் (பிளாஷ்பேக்குக்குள் இன்னொமொரு சின்ன பிளாஷ்பேக் வருகிறது) அலுப்புத் தட்டாமல் எடுத்திருக்கிறார்.

கொலையாளிகளால் கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டு பின்னர் கணவன் மற்றும் மகளும் எரிக்கப்பட்டதால் பழி வாங்கத் துடிக்கும் பொன்னியாகக் கிட்டத்தட்ட ஒப்பனையே இல்லாத கீர்த்தி சுரேஷ். தேசிய விருது வாங்கிய அழுத்தம் காரணமாக சற்று மிகையாக நடிக்க முயல்கிறார். அவருக்கு உதவும் ஒன்று விட்ட அண்ணன் சங்கையாவாக இயக்குநர் செல்வராகவன். நடிகராக ஒரு சுற்று வருவதற்கு வாய்ப்பிருக்கிறது (சமீபத்திய பீஸ்டிலும் நடித்திருந்தார்). ஆனால் இருவருக்கும் வன்முறைக் காட்சிகளில் உடல்மொழி சரியாகக் கைவரவில்லை. கத்திக்கு வலிக்குமே என்று குத்துவது போல் இருந்தது.

விருதுகளுக்குத் தகுதியான அருமையான ஒளிப்பதிவு (யாமினி யக்னமூர்த்தி). பின்னணி இசையும் (C.S.Sam) அளவோடு இயல்பாக இருக்கிறது.

விருதுகளுக்குத் தகுதியான அருமையான ஒளிப்பதிவு (யாமினி யக்னமூர்த்தி). பின்னணி இசையும் (C.S.Sam) அளவோடு இயல்பாக இருக்கிறது.

மூலக்கதையில் இல்லாத சாதீயக் கொடுமை பின்னணி. அது இல்லாமல் எடுத்திருந்தாலும் பொன்னிக்கு இழைக்கப்பட்ட கொடுமையின் தாக்கம் குறைந்திருக்காது. ஆனால், மாரி செல்வராஜ் (பரியேறும் பெருமாள், கர்ணன்), வெற்றிமாறன் (அசுரன்) ஆகியோர்க்கு கிடைத்த வரவேற்பைப் பார்த்து இயக்குநர் அவ்வாறு நினைத்திருக்கலாம். மேலும் சில காட்சிகள் திரைப்பட விழாக்களை கருத்தில் கொண்டு எடுத்ததைப் போல் இருந்தன.

சிலாகிக்கக் கூடிய அம்சங்கள் இருந்த போதிலும் மொத்தத்தில் நிறைவளிக்கவில்லை.

சிறு வயதினர் மற்றும் வன்முறைக் காட்சிகளுக்கு ஒவ்வாமை உடையவர்கள் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டிய படம்.

**எழுதியவர்: ரவி திருவேங்கடத்தான்**

# வணிக ஆதரவாளர்களுக்கு நன்றி!





# தமிழ்ப்பள்ளி மாணவர்கள்

**வகுப்பு: நிலை 1**

**தலைப்பு: என் ஆசை எழுத்து**

**ஆசிரியர்: ஜெயகௌரி சிற்றரசன்**









| | |
|---|---|
| அபிஸ்ரீ செந்தில்குமார் | ஆதர்ஷ் அருண்சங்கர் |
| | |

# தமிழ்ப்பள்ளி மாணவர்கள்




அக்ஷிதா மாணிக்க சுடர் கலைவாணி





அம்ரிஷ் மாணிக்க சுடர் கலைவாணி

# தமிழ்ப்பள்ளி மாணவர்கள்






**தியா ரவீந்திரன்**





கவின் மணிவண்ணன்

# தமிழ்ப்பள்ளி மாணவர்கள்

| | |
|---|---|
|   |   |
| மகஸ்ரீ பாலாஜி | பிரணவ் குமரன் |

# அடிமுதுகு நரம்பு வலி (Sciatica Pain)




சியாட்டிகா (அடிமுதுகு நரம்பு வலி) என்பது சியாட்டிக் நரம்பின் பாதையில் பரவும் வலியைக் குறிக்கிறது, இது உங்கள் கீழ் முதுகில் இருந்து இடுப்பு மற்றும் பிட்டம் வழியாக ஒவ்வொரு காலின் கீழும் கிளைக்கிறது. பொதுவாக, சியாட்டிகா உங்கள் உடலின் ஒரு பக்கத்தை மட்டுமே பாதிக்கிறது.

சியாட்டிகா பொதுவாக நழுவிய வட்டு (herniated disc), எலும்புத் துருத்தவளர்ச்சி (bone spur), அல்லது முதுகெலும்பு குறுகுதல் (spinal stenosis) காரணமாக நரம்பின் ஒரு பகுதி அழுத்தப்படுவதால் ஏற்படுகிறது. இது பாதிக்கப்பட்ட காலில் வீக்கம், வலி மற்றும் அடிக்கடி உணர்வின்மையை ஏற்படுத்துகிறது.

சியாட்டிகாவுடன் தொடர்புடைய வலி கடுமையானதாக இருந்தாலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அறுவை சிகிச்சை அல்லாத சிகிச்சைகள் மூலம் சில வாரங்களில் தீர்க்கப்படுகிறது. குறிப்பிடத்தக்க கால் அல்லது குடல் பலவீனம், அல்லது சிறுநீர்ப்பை மாற்றங்களுடன் தொடர்புடைய கடுமையான சியாட்டிகா உள்ளவர்களுக்கு அறுவை சிகிச்சை தேவைப்படலாம்.

உங்கள் கீழ் (இடுப்பு) முதுகுத்தண்டிலிருந்து உங்கள் பிட்டம் மற்றும் உங்கள் காலின் பின்புறம் வரை பரவும் வலி சியாட்டிகாவின் தனிப்பண்பாகும். நரம்புப் பாதையில் ஏறக்குறைய எங்கும் நீங்கள் அசௌகரியத்தை உணரலாம், ஆனால் இது உங்கள் கீழ் முதுகில் இருந்து உங்கள் பிட்டம் மற்றும் உங்கள் தொடை மற்றும் கெண்டைக்கால் பின்னால் செல்லும் பாதையை குறிப்பாகப் பின்பற்றும்.

லேசான வலி முதல் கூர்மையான, எரியும் உணர்வு அல்லது வேதனையான வலி வரை சியாட்டிகாவின் வலி பரவலாக மாறுபடும். சில நேரங்களில் அது வெட்டி இழுப்பது அல்லது மின்சார அதிர்ச்சி போல் உணரலாம். நீங்கள் இருமல் அல்லது தும்மும்போது இது மோசமாக இருக்கும், மேலும் நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பது அறிகுறிகளை மோசமாக்கும். பொதுவாக உங்கள் உடலின் ஒரு பக்கமே பாதிக்கப்படும்.

# உடல்நலக் குறிப்பு

சிலருக்கு பாதிக்கப்பட்ட கால் அல்லது பாதத்தில் உணர்வின்மை, கூச்ச உணர்வு அல்லது தசை பலவீனம் இருக்கும். உங்கள் காலின் ஒரு பகுதியில் வலி மற்றும் மற்றொரு பகுதியில் உணர்வின்மை இருக்கலாம். இந்த வலி உங்களுக்கு ஏற்பட்டால், தாமதிக்காமல் உங்கள் மருத்துவர், நரம்பியல் நிபுணர் அல்லது உடல் சிகிச்சை நிபுணரை அணுகவும்.

அடுத்த அத்தியாயத்தில் சியாட்டிகாவிற்கான சிகிச்சை பற்றி விவாதிக்கலாம்.

**தொகுப்பு - ராம்கி கவசேரி**


**தமிழாக்கம்: கவியரசன் அம்பேத்கார்**

# வாசகர் கருத்து

இந்த மாத கதம்பம் இதழைப் பற்றிய உங்கள் கருத்தை தெரிவிக்க விரும்பினால், இந்த படிவத்தின் மூலம் எங்களுக்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

newsletter.rts@richmondtamilsangam.org எனும் மின்னஞ்சலிலும் எங்களை தொடர்பு கொள்ளலாம். நன்றி!

## முற்றும்



கதம்பம் இதழில் தங்கள் கதை, கட்டுரை, கவிதை மற்றும் பயனுள்ள பல விஷயங்களை இரிச்மண்டு சமூகத்துடன் பகிர்ந்து கொண்ட அனைத்து எழுத்தாளர்களுக்கும் தமிழ்ச்சங்க நிர்வாகக் குழுவின் மனமார்ந்த நன்றிகள்.